# மன்னாரில் படையினரால் 21 வீடுகள் தீமூட்டி எரிப்பு

(மன்னார்) மன்னார் மாவட்டத்தில் தமிழருக்கு சொந்தமான 21 வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் தீமூட்டி எரிக்கப்பட்டன. கடந்த சனிக்கிழமை பகல் கடல் மார்க்கமாகவும், காட்டு மார்க்கமாகவும் வந்து முள்ளிக்குளம் என்னும் இடத்தைச் சுற்றிவளைத்த இராணு
[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 06 இதழ் 67
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18 — 04 — 1992

## க. பொ. த. (உயர்) பரீட்சை 1991 வினாத்தாள்கள் யாழ். வந்தன

(யாழ்ப்பாணம்) கல்விப் பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சை 1991க்கான எஞ்சிய வினாத்தாள்களும் எம். எல். ரி., ஆசிரியர் பயிற்சி தொலைக்கல்வி இறுதியாண்டு, இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சைகளுக்கான வினாத்தாள்களும் நேற்றுமாலை கல்வித்திணைக்களத்துக்கு வந்து
[4ம் பக்கம் பார்க்க]

## அபிவிருத்தித் திட்டங்களை சீர்குலைக்க முயற்சி

[கொழும்பு] அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகள் தற்போது முனைப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி பிரேமதாசா குற்
[4-ம் பக்கம் பார்க்க]

# புலிகளுடன் பேச்சுநடத்த பௌத்த பிக்குகள் குழு இன்று யாழ்ப்பாணம் வர ஏற்பாடு?

(கொழும்பு)

**இனப் பிரச்சினை தீர்வு குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த பௌத்த பிக்குகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் பயணம்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரும் இவர்கள் அங்கு வழிபாடுகளை முடித்துக் கொண்டு ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி வருவர். அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் செல்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் தலைவர்களான திரு. மாத்தையா, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உட்பட பலரைச்சந்தித்து பேச்சு நடத்துவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள இப்பௌத்த குழுவினர் தமது சந்திப்பின் போது போர்நிறுத்தம் பற்றியும் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிசாரையும் இராணுவத்தினரையும் விடுவிப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ரூபவாஹினி சேவை மட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு) மின்வெட்டு காரணமாக ரூபாவாஹினி ஒளிபரப்புகள் மட்டுப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும் 2வது ஒளிபரப்பு இன்று முதல் மாலை 6-00 மணிக்கு ஆரம்பித்து ஆங்கில செய்தி அறிக்கையு
(4ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மின்சார வெட்டு மேலும் நீடிக்கப்படும்

[கொழும்பு] தென்பகுதியில் மின் உற்பத்தி நிலைய நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் மட்டம் மிகவும் குறைந்து வருவதினால் மின் உற்பத்தியும் அரைப்பங்காகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தினசரி ஒரு கோடி ரூபா செலவில் அனல் மின்சார நிலையங்களை இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தென் பகுதியில் மின்வெட்டு மேலும் நீடிக்கப்படலாம் என்று மின்சார சபை எச்சரிக்கை செய்துள்ளது.

இம்மாதம் 20-ம் திகதி வரை இந்த நீடிப்பு இடம் பெறலாம் என்று தெரிவிக்கப் பட்டது.
(4-ம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர் பரீட்சை மே மாதம் 25ம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்திடமிருந்து வினாத்தாள்கள் வந்ததும் இப்பரீட்சை நடைபெறுமென்று யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (சு)

## சிம்பாப்பேயில் இலட்சக்கணக்கானோர் பட்டினியால் இறக்கும் நிலை

(லுசாக்கா) சிம்பாப்பேயில் மோசமான வரட்சி ஏற்பட்டுள்ளதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலங்குகள் உயிரிழந்துள்ளன என்றும் லட்சக்கணக்கான மக்கள் பசி பட்டினியால் இறக்கும் நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாட்டிலுள்ள ஆறரைக் கோடி மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்றுவதற்கு அவசர நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தென் ஆபிரிக்க அமைச்சர்கள் அவசரமாகக் கூடியுள்ளார்கள். (சு)

## இராணுவ ஆதிக்கத்தை குறைக்க படை அமைப்பில் மாற்றம்

[கொழும்பு] இராணுவ மேலாதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடனே கூட்டுப்படை தலைமையக அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது.

அண்மைக்காலத்தில் இடம் பெற்ற இராணுவ தரப்பிலான செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளமையாலே இம்மாற்றம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நேரடி உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட தினத்திலிருந்து கூட்டுப்படைத் தலைமையகத்தினுடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்டு படைத்தளபதிகளுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் தனித்தனியே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [சு]

## தமிழகம் பிரிவதை தடுக்க புலிகளை தடைசெய்யவேண்டும்

[திருப்பதி] இந்தியாவிலிருந்து தமிழகம் தனியாகப் பிரிவதைத் தடுக்க வேண்டுமென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென இந்திரா காங்கிரசும்- அ. இ. அ. தி. மு. க. வினரும் கூறியுள்ளனர்.

தமிழ்நாடு பிரிவினைக் குழுக்களுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. புலிகளைத் தடை செய்யும் விடயத்தில் இந்திரா காங்கிரஸிற்கு அ. தி. மு. க- பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவை அவதூறாக பேசிய இளைஞர் கைது

(சென்னை) தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதற்காக பாட்டாளி மக்கள்கட்சி இளைஞர் அணித் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதா பற்றி மேடைகளில் அவதூறாக பேசியதற்காக இக்கட்சியின் இளைஞர் அணித் தலைவர் ஜனாப் கே. எம். ஷெரீப் புதுக்கோட்டையில் கைது செய்யப்பட்டார்.

பாட்டாளி மக்கள்கட்சியின் சில பிரிவுகள் புலிகளுடன் நெருங்கியதொடர்பு வைத்திருந்ததற்கான ஆதாரங்களும் பொலிசார் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

## குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட பஸ்

[கொழும்பு] சுதந்திரக்கட்சியினர் நடாத்திய கதிர்காம பாதயாத்திரைக்கு தொண்டர்களை ஏற்றிய மினிபஸ்சே அம்பாறை குண்டுவெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பஹரகம, அம்பாறை குண்டு வெடிப்பு விசாரணைகளில் பல முன்னேற்றகரமான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சுதந்திரக்கட்சிக் கிளை ஒன்றின் காரியதரிசியின் தீவிர உதவியுடன் புலிகள் இவ்விரு குண்டு
[4-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு நகரில் வீடு வீடாக தேடுதல்

(கொழும்பு) கொழும்பு நகரில் பொலிசார் வீடு வீடாகத் திடீர் சோதனைகளை நடாத்தி வருகிறார்கள்.

கொழும்பு மாவட்டத்தினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகச் சந்தேகிக்கும் பொலிசார் மீண்டும்
[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர்நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 6040)

### வைத்திய சேவை

எனது வைத்திய சேவை புத்தாண்டு முதல் மீண்டும் நடைபெறுகிறது. டாக்டர் கே. குப்புசாமி, சண்முக ஆயுள்வேத வைத்தியசாலை, சிவன்பண்ணை வீதி, வெள ளாந்தெரு, யாழ்ப்பாணம். (சி-6160)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த Gotukola Capsules. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6097)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள். வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்கள். பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-6126]

### துர்க்கா மங்கள சேவை

ராகு, கேது, செவ்வாய். சனிபார்வை தோஷ நிவர்த்தி இலவச ஆலோசனையுடன் தடைப்பட்ட திருமணம் ''திருமணத்திருவாக'' அமையவும், எண்கணிதம், வாக்கிய கணிதம், கைரேகை, பலன் அறியவும, கண்டுபிடிக்காத வருத்தம், நோய், பிணிகளுக்கும் தகுந்த ஆலோசனைக்கு தொடர்பு கொள்ளவும். S. B. தங்கராஜ சோதிடர் 115, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-6145]

### தவறிவிட்டது

க. அன்பழகன் இலக்கம் 613542116 V அடையாள அட்டையும் பொருட்களும் கொம்படிக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: ஷிஅன்புஜீ (க. அன்பழகன்) வண்ணை காமாட்சி ஆலயக் குளக்கரை நாச்சிமார் காவிலடி, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவும். (சி-6166)


## இராஜகோபுர கும்பாபிஷேகம்

[கொழும்புத்துறை]

யாழ். வண் - வடமேற்கு கேசாவில் அருள்மிகு முத்து விநாயகர் தேவஸ்தான இராஜகோபுர மஹாகும்பாபிஷேகம் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகி 10-00 மணிவரை நடைபெற உள்ளது.

விசேட அபிஷேகம், பூசை வழிபாடும், கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். [154]

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு இன்று மாலை 6-00 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் நிறைவேற்றப்படும். இச்சடங்கின் போது புதிய நெருப்பு, தண்ணீர் உண்டாக்கப்படும்.

யாழ். அடைக்கலமாதா ஆலயத்தில் பங்குத் தந்தை வணபிதா. மங்களராஜாவினால் திருவிழிப்பு வழிபாடுகள் இரவு 10-30க்கு நடைபெறும்.

# பெண்கள் மீதான வன்முறை

## மனித உரிமைகள் குழு கண்டனம்

(ஜெனிவா)

உலகின் பல பாகங்களிலும் பெண்கள், ஆயுதப்படையினராலும் பொலிசாரினாலும் பலாத்காரம் செய்யப்பட்டு வருகிறார்கள் என்பதை அண்மையில் வெளியான சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கவலையுடன் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் காஷ்மீர் மாநிலப்பகுதியில் நடந்த ஒரு சம்பவம் பற்றி குறிப்பிடுகையில் தெரிய வருவதாவது:

1990ஆம் ஆண்டு மே 18ம் நாள், இரவு சாமவேளை, ஒரு திருமண கோஷ்டியினரை ஏற்றிவந்தபஸ், இந்திய காஷ்மீர் மாநில படங்கம் கிராம எல்லையை வந்தடைந்தது.

பஸ் நிறுத்தப்பட்டதும் காவல்படையினர் சரமாரியாக பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மாப்பிள்ளையின் சகோதரர் ஸ்தலத்திலே பலியானதோடு, மணப்பெண் முபினு கானியும், மாப்பிள்ளையுமாக 9 பேர் காயமுற்றனர்.

பஸ் உள்ளே வந்த படையினர் எல்லோருக்கும் நல்ல அடி கொடுத்துவிட்டு புது மணப்பெண் முபினு கானியையும் அவரது நிறைமாதக் கர்ப்பிணியான மாமியையும் அயலிலுள்ள வயலுக்கு இழுத்துச் சென்றனர்.

''நாலு ஐந்து பேர் என்மீது பலாத்காரம் செய்தனர். நான்கதறிஅழுது நிலைமையை விளக்கியும் பயனற்றுப் போயிற்று'' என்று கூறுகிறார் முபினு கானி. அவரை 48மணி நேரம் ராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்தனர்.

படையினர் தரப்பில் ஆரம்பத்தில், சண்டையின் மத்தியில் இந்த பஸ் அகப்பட்டுக் கொண்டதாக சமாளித்துக் கூறியபோதும், பின்பு இப்பகுதி பொலிஸ் அதிகாரி காவல் படையினர் அத்துமீறி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததையும், 4 பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளானதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து 4 காவல் படையினர் சிலகாலம் கடமை புரிய விடாமல் நிறுத்தப்பட்டனர். ஆனல் சட்ட நடவடிக்கையோ, ஒழுக்கமீறல் நடவடிக்கையோ அவர்கள் மீது எடுக்கப்படவில்லை.

உலகில் பெண்கள் எவ்வாறு மானபங்கப் படுத்தப்படுகிறார்கள். அதன்பின் படையதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவ்வாறு சட்டத்தினின்றும் தப்பிக்கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமென்று மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. (கே)

## வளைகுடாவிலிருந்து திரும்பியோர் தொழில் முயற்சி ஆரம்பிக்க விரைவில் வங்கிக் கடன் வசதி

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தினால் வேலைகளை இழந்தோர் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வங்கிக் கடன்வசதி அளிக்கப்படவுள்ளது.

மத்திய கிழக்கு யுத்தத்தினால் தொழில்களை இழந்து நாடு திரும்பிய இலங்கையர் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கென கடன் வழங்கும் திட்டம் ஒன்றை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் மக்கள் வங்கியும் இணைந்து வழங்கவுள்ளது.

இந்த திட்டத்தின்படி வருடம் ஒன்றிற்கு 11 சத வீத வட்டிக்கு ரூபா 10,000 முதல் 30,000 ரூபா வரை கடன் வழங்கப்படவுள்ளது. நாடு திரும்பியவர்களுக்கு அல்லது அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு இத்தகைய கடனுதவிகளை வழங்குவதற்கான ஆலோசனை நாடு முழுவதிலுமுள்ள 329 மக்கள் வங்கிகிளை முகாமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கால்நடை வைத்திய சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க பொதுக்கூட்டத்தில், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்ஊடாக, கிளிநொச்சி நகர்பிரதேச பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பால்வழங்கும் திட்டம் ஒன்றினை நடைமுறைப் படுத்துவதற்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வைத்திய சேவையினை விஸ்தரிப்பதற்குமான, நடவடிக்கைகளை எடுப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. அமிர்தலிங்கம், மிருக வைத்தியர் திருமதி சுப்பிரமணியம் திட்டமிடல் பணிப்பாளர் நாகேந்திரம், கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இறுதிப் பரீட்சை

(கொழும்பு)

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி இறுதிப்பரீட்சை இம்மாதம் 27, 28, 29, 30 ஆகிய தினங்களில் நடைபெற வருக்கிறது. [மா]

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக் குழுவினல் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதும். இவ் ஆட்டம் நெல்லியடி ம. ம. வியில் நடைபெறும்.

## வெங்காய உற்பத்தி

(ஊர்காவற்றுறை)

அராலிப்பகுதி மக்கள் தங்களின் தரிசு நிலங்களில் வெங்காயச்செய்கையை ஆரம்பித்துள்ளனர். மழைவீழ்ச்சியை எதிர்பார்த்து கிணறுகளிலுள்ள நீரை மட்டுப்படுத்தி வெங்காயச் செய்கைக்குப் பயன்படுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

## ''செந்தமிழை வளர்ப்பது பொதுமன்றங்கள் கடமை''

[கொழும்புத்துறை]

தாய் மொழிப் பயிற்சியில் வித்தியாலய ஆசிரியர்களுக்கு மட்டும்தான் பொறுப்புள்ளது என்ற மனநிலை மாறவேண்டும். முடியுடை வேந்தர்களாலும் குருநில மன்னர்களாலும் வள்ளல்களாலும் போற்றப்பெற்றுச் சிறந்தோங்கிய நம் செந்தமிழை வளர்ப்பதில் பொதுமன்றங்கள் சபைகள மற்றும் சனசமூகநிலையங்கள் ஈடுபடவேண்டும்.

யாழ். மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனத்தால் வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பிரதம நடுவராகக் கலந்துகொண்ட கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் இவ்வாறு கூறினர்.

ஒவ்வொரு பிரிவுகளிலும் தொகையான இளைஞர்கள் பங்குபற்றினர். இப் போட்டிகளைச் சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால், செயலாளர் செ. சண்முகலிங்கம், பொருளாளர் வி. வி. இராஜரத்தினம் ஆகியோர் ஒழுங்குசெய்து சிறப்பாக நடாத்தினர்கள். (154)

## வெருகல் முருகன் ஆலயம் இராணுவத்தால் சேதம்

(திருமலை)

மூதூர் ஈச்சிலம்பற்று வெருகல் சித்திரவேலாயுத ஆலயப் பகுதியல அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆலயத்திற்கு பெருமளவில் சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெருகல் சித்திரவேலாயுத ஆலயம் கிழக்கின் சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (மா)

## நஜிபுல்லாவிற்கு அகதி அந்தஸ்து வழங்க இந்தியா இணக்கம்

(புதுடில்லி)

ஆப்கானிஸ்தான் முன்னள் அதிபர் நஜிபுல்லாவுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இதேவேளை ஜனப் நஜிபுல்லாவிற்கு இந்தியா அரசியல் புகலிடம் வழங்காதென்றும் அவர் ஒரு அகதியாக இந்தியா வரமுடியுமெனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசியல் புகலிடம் வழங்குவதற்கான கொள்கை தம்மிடம் இல்லையென்றும் இந்தியா தெரிவித்துள்ளது. சி)

## மானிப்பாயிலும் வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க ஏற்பாடு

[மானிப்பாய்]

மானிப்பாய் கோவிற்பற்று வர்த்தகசங்கத்தின் எல்லைக் கோட்டுக்குள் அமைந்திருக்கும் சகல வர்த்தகநிலையங்களும் இம் மாதத்திலிருந்து சனிக்கிழமை அரை நேரமும் ஞாயிறு முழு நேரமும் பூட்டப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக கடந்த மாதம் 12ம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் வர்த்தக ஊழியர் சங்கமும் மானிப்பாய் கோவிற்பற்று வர்த்தக சங்கமும் இணைந்து நடாத்திய கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் சகல வர்த்தகநிலையங்களும் சனி 2 மணியுடனும், ஞாயிறு முழுநேரமும் வழமையான விடுமுறையாகக்கடைப் பிடிக்கப்படவேண்டும். ஊழியர் நலன் கருதி அவர்களுக்குரிய விடுமுறைகள் கொடுக்கப்படுவதுடன் ஈ. பி. எப்., ஈ. ரி. எப், என்பன செலுத்தப்படவேண்டும். வர்த்தக விடுமுறைகள் வலிகாமம் பிரிவுகளுக்கான 1991ம்ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்கு முறையைப் பின்படுத்தப்படுவதுடன் சகல வர்த்தகர்களும் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. [71]

## மேலதிக அரச அதிபருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதனுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இவர் தற்போது யாழ். மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிவருகின்றார். இவருக்கு திடீர் இடமாற்றக் கடிதம் கிடைத்திருக்கிறதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

சித்திரை மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த உடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இத் திடீர் இடமாற்றம் திருகோணமலையில் உள்ள வடக்குக் கிழக்கு மாகாண சபை அலுவலகத்திற்கே கிடைத்திருப்பதாகவும்தெரிய வந்துள்ளது. (154)

## பால்மா, போசாக்கு உணவு வழங்குவதற்கு முயற்சி

(கொழும்புத்துறை)

பாலர் பாடசாலைகளுக்கும் பால் போஷாக்கு உணவுகள் வழங்கத் தயாராகவுள்ள அமைப்புகள்பற்றிய சகல விபரங்களையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

உதவிகோரும் அமைப்புக்கள், கிராமியமட்ட அமைப்பாக இருப்பதுடன் வேறு எந்த அமைப்புக்களிடமோ தனிநபர்களிடமோ பால் போசாக்கு உணவு தயாரிப்புச் செலவிற்கு உதவி பெற்றிருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

# தமிழகத்தில் அகதி முகாம்களில் இருந்தவர்கள் மீண்டும் மன்னாரில் அகதிகளாக இருக்கின்றனர்

## பாதுகாப்பிற்கு எவரும் உத்தரவாதமில்லை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதிகளாக இருந்துவிட்டு சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ள மன்னார் அகதிகள் இங்கும் மீண்டும் அகதிகளாகவே முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இந்தியவில் உள்ள அகதி முகாம்களில் பெரும் இன்னல்களை அனுபவித்துவிட்டு நிர்ப்பந்தத்தின் பேரில் தமது சொந்த இடமான மன்னாருக்கு திரும்பிவந்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அங்குள்ள ஐந்து அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

தலைமன்னார் பகுதிக்கு இதுவரை 11 தடவைகள் அகதிகள் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளார்கள், இவர்கள் உடனடியாக பேசாலை, மன்னார் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஓலைக்குடில் முகாம்களுக்கு கொண்டுவரப்படுகின்றார்கள்.

சமூக சேவைப் பிரிவினர் இவர்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதமும், அரிசி, மா, சீனி ஆகிய உலர் உணவு மட்டுமே கொடுக்கின்றார்கள். சமையல் பாத்திரமோ அல்லது படுக்கைக்குரிய பாய்களோ எதுவுமே கிடையாதாம். தமது சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு சமூக சேவைப் பகுதியினரிடம் மக்கள் கேட்டபோது அங்கு யுத்தம் நடைபெறுகின்றது. உங்கள் வீடுகளில் இராணுவம் முகாமிட்டுள்ளது. ஆகவே தற்போதைக்கு நீங்கள் உங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாது எனக் கூறுகின்றார்களாம்.

மன்னார் வந்துள்ள அகதிகளுக்கு மூன்று மாதங்களுக்கு மட்டுமே உலர் உணவு வழங்கும்படி அரசு கூறியுள்ளதாம். அதன்பின்பு இவர்களின் நிலை ஒரு கேள்விக்குறியாகவே இருக்கப்போவதாகவும் கூறப்படுகிறது. மன்னாரிலுள்ள அகதி முகாம்களுக்கு யாரும் இதுவரை பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவில்லையென்றும், இந்த முகாம்களில் உள்ள மக்கள் இரவு நேரங்களில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கு அடிக்கடி உள்ளாகி பலர் கைதுசெய்யப்படுவதாகவும், இவர்களின் நலன்களை கவனிப்பதற்குஎந்தவொரு தொண்டர் ஸ்தாபனங்களும் எதுவித அக்கறையும் காட்டவில்லையென்றும் கூறப்படுகின்றது.

முகாம்களில் உள்ள மக்களுக்கு, வைத்தியவசதிகளும், குடிதண்ணீரும் பெரும் பிரச்சனையாக இருப்பதாகவும் இவர்களில் 80 வீதமான மக்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டவர்களென்றும் இவர்களின் படகுகளில் பெரும்பாலானவை தற்போதும் தமிழ்நாட்டுக் கரையோரங்களிலேயே நிறுத்தப்பட்டிருப்பதாகவும், இவர்கள் இலங்கை திரும்பும்போது தமது படகுகளை தம்மிடம் ஒப்படைக்கும்படி கோரியபோது, அது மறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## புலிகளின் பலம்: ராணுவம் ஆராய்வு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் பலம் குறித்து இராணுவ நிபுணர்கள் துல்லியமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

கிழக்கில் 500 முதல் 700 புலிகள் வரையில இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தபோதும் புலிகளின் எண்ணிக்கையைச் சரியான மதிப்பீட்டில் கணக்கிடுவது கடினமாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் நகர்விற்கேற்ப புலிகளும் தங்கள் உத்தியை மாற்றுவார்களென வம் கூறப்படுகிறது. [சி]

## பாடசாலை சென்ற சிறுமியிடம் தங்க வளையல்கள் அபேஸ்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில பாடசாலைக்குச் செல்லும் சிறுமிகளை ஏமாற்றி அவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளைத் திருடர்கள் துணிகரமாக அபேஸ்செய்து வருகின்றனர். கொழும்புத்துறைப் பகுதியில் இத் துணிகரத் திருட்டுச் சம்பவம் பட்டப் பகலில் நிகழ்ந்துள்ளது,

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரத்தில், ஊர்காவற்றுறையிலிருந்து அகதியாக இடம்பெயர்ந்து தங்கியுள்ள ஒருவரின் மகளான ஏழு வயதுச் சிறுமி யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலைக்குச் செல்லும்போது சைக்கிளில் வந்த இனம்தெரியாதநபர் ஒருவர் தங்கச்சி பள்ளிக்கூடம் போகிறீரா எனக் கேட்டுச் சைக்கிளில் ஏற்றிச்சென்று சன நடமாட்டம் இல்லாத இடத்தில் நிற்பாட்டிக் கையில் இருந்த ஒரு தங்கப்பவுண் எடையுள்ள ஒரு சோடி காப்பையும் கழற்றிக் கொண்டு சிறுமியையும் சிறிது தூரம் ஏற்றிச்சென்று இறக்கிவிட்டுச் சென்றுவிட்டாராம்.

அழுதபடி நின்ற இச் சிறுமி பின்னர் வீதியால் சென்றவர்களினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். [154]

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடமேற்கு கேசாவில் முத்துவிநாயகர் தேவஸ்தான இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (சு)

## இராசிபலன்

18/04/1992
சனிக்கிழமை
(தமிழுக்கு சித்திரை 06)

பிரதமை மு. ப. 10-05 வரை, சுவாதி பி. ப 4-00 வரை, அமிர்தசித்தம், இராகு காலம் காலை 9-02 முதல் 10-32 வரை. சுபநேரம் மாலை 3.02 முதல் 4-32 வரை.

மேடம்; தனலாபம், மனோதைரியம், கீர்த்தி.

இடபம்: நினைத்தது கைகூடும், தர்மசிந்தனை, மகிழ்ச்சி

மிதுனம்: அஜீரணக் கோளாறு, தாழ்ந்த நிலை, இடையூறு.

கடகம்: புத்தி சஞ்சலம், காரியதாமதம், கவலை.

சிங்கம்: விருந்து வைபவம், நண்பர் உதவி, வாக்கு வன்மை.

கன்னி: அதிக செலவு, மனச் சங்கடம், அவதி.

துலாம்: கௌரவம், தொழில் லாபம், குடும்ப சுகம்.

விருச்சிகம்: கீழ்ப டிதல், சோம்பல், தனச்செலவு.

தனுசு: பெண்உதவி. தனமூல சந்தோசம், தெய்வ தரிசனம்.

மகரம்: குடும்ப சிறப்பு, தொழில் வருமானம், அதிகாரம்.

கும்பம்: சத்து ருபீடை, தயக்கம், வைத்தியச் செலவு.

மீனம்: எதிர்பாராத துயர், புத்திரர் செலவு, கடும்சினம்.

— ஜோஸ்யர்

## "காசுப்பயிர்களில் நாட்டத்தைவிட்டு சிறுதானிய பயிர்களில் ஈடுபடவேண்டும்"

### கமத்தொழில் ஆணையாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசாங்கம் பொருளாதாரத் தடையை அமுல் நடத்தியபடியால், யாழ் மாவட்டத்தில் விவசாய உற்பத்தி பெருகி உள்ளது''.

இவ்வாறு தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால், வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவத்தில் யாழ்,மாவட்ட கமத்தொழில் ஆணையாளர் திரு. கா. குணரத்தினம் கூறினார்.

கோண்டாவிலில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது: யாழ். மாவட்டத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட பயிர்வகைகள் செய்யப்படுகின்றன. நிலப் பரப்பு குறைவாக இருந்தபோதிலும் விளைச்சல் அபரிதமாக உள்ளது.

மிளகாயிலும் வெங்காயத்திலும் தன்னிறைவு அடைந்ததோடு, பிற இடங்களுக்கு உற்பத்தியை அனுப்பக்கூடிய அளவில் விளைச்சல் உள்ளது. 6,000 மெற்றிக் தொன் மிளகாயும், 35,000 மெற்றிக் தொன் வெங்காயமும் - இது இலங்கையில் உற்பத்தியாகும் வெங்காயத்தில் 60, 70 வீதமாகவும் உளளது

நெற்செய்கை 17,500 ஹெக்டரில் விளைவிக்கின்றபோதிலும், யாழ். மாவட்டத்துக்குரிய அரிசித் தேவையை இது பூர்த்திசெய்யக்கூடிய நிலையில் இல்லை. இது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருமாதத்திற்குரிய தேவையையே பெற்றுள்ளது.

தானியச் செய்கையில் 90/91ம் ஆண்டில் 4,500 ஹெக்டர் நிலத்தில் உற்பத்தி செய்து வெற்றிபெற்றுள்ளோம்.

சாசுப் பயிர்களில் நாட்டத்தை விடுத்து, எமக்கு போஷாக்குத்தரும் சிறு தானியப் பயிர்களில் மக்கள் ஈடுபடவேண்டும்.

விழா தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்றது. தமிழீழ ஆய்வு நிறுவன பொறுப்பாளர் ரவி, பாலகுமார், அரசாங்கஅதிபர் கா. மாணிக்கவாசகர் வேறு பலரும் பேசினர். வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் பரிசில்களை வழங்கினார். (சு)

## ஐ. நா.வுக்கான 3லிபிய ராஜதந்திரிகளை வெளியேற்ற அமெரிக்கா உத்தரவு

(லண்டன்)

லிபியாவின் ராஜீய பிரதிநிதிகளை தங்கள் நாட்டிலிருந்து வெளியேறுமாறு பல நாடுகள் கட்டளையிட்டுள்ளன.

ஐ. நா. வுக்கான மூன்று லிபிய ராஜதந்திரிகளை வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கிறது.

ஜப்பான், டென்மார்க், பெல்ஜியம், சுவீடன் ஆகிய நாடுகள் லிபிய ராஜதந்திரிகளை தங்கள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டுள்ளன.

லிபியாவுக்கு எதிரான தடைகளை செயல்படுத்த 12 உறுப்பினர் ஐரோப்பிய சமுதாயம் இணங்கியுள்ளது. ரஷ்யா, பாகிஸ்தான், எகிப்து ஆகிய நாடுகளும் ஐ நா. தீர்மானத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்டுள்ளன.

ராணுவ மற்றும் தொழில் நுட்ப நிபுணர்களையும் லிபியாவிலிருந்து ரஷ்யா அழைக்கவுள்ளது.

1988ஆம் ஆண்டு ஸ்கொட்லண்ட் மேலாகப் பறந்த அமெரிக்க விமானத்தைக் குண்டு வைத்து தகர்த்ததாகக் கருதப்படும் இரு லிபிய பிரஜைகளை அமெரிக்கா அல்லது பிரிட்டனிடம் ஒப்படைக்குமாறு ஐ. நா. பந்தோபஸ்து

[4-ம் பக்கம் பார்க்க]

## ★ பறிமுதல் செய்யப்பட்ட உணவு முத்திரைகளை வழங்க ஜனாதிபதி அவசர உத்தரவு

(கொழும்பு)

உணவு முத்திரை மறுக்கப்பட்டவர்களுக்கு அவற்றை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி பிரேமதாசா அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்போது நாட்டில் தோன்றியுள்ள வறட்சியால் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை ஜனாதிபதி நேரடியாக மதிப்பீடு செய்ததையடுத்தே இந்த அவசர உத்தரவு பிறப்பிக்சப்பட்டுள்ளது. வறட்சியால் நாட்டின் சகல பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உணவு முத்திரைகளை சுமார் மூன்றரை லட்சம் பேர் பொய்யான தகவல்களை வழங்கி பெற்று வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இம்மாதம் முதலாம் திகதி முதல் இவர்களதுஉணவு முத்திரைசள் ரத்துச்செய்யப்பட்டிருந்தது.

இவற்றையே மீண்டும் வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (சி)

## ஈஸ்ரர் பஜனை

[யாழ்ப்பாணம்]

உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் சங்கீத பூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் தொகுத்தளிக்கும் ஈஸ்ரர் பஜனை நடைபெறவிருக்கிறது. [மா]

## தவக்கால நற்சிந்தனை

### பெரிய சனி

''கிறீஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம். இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறீஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர்''.

(உரோ. 6:8-9)

— மோ தார்சிசியஸ்.

# "போரில் தோல்வி கண்ட நிலையிலே இராணுவ மட்டத்தில் அரசு மாற்றங்களை செய்துள்ளது"

## - கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசு தமிழருடனை போரில் தோல்விகண்ட நிலையில் இராணுவமட்டத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி புலிகளை அழிப்பதற்கு கங்கணம் கட்டிநிற்கிறது.'' இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்தார்.

நல்லூரில் அண்மையில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

40 வருடங்களாகமாறிமாறி வந்த சிங்கள அரசுகளும் தமிழ் மக்கள் மீது இத்தந்திரோபாயங்களையேகையாண்டு வந்துகொண்டிருப்பதை நாம் அறிவோம்.

இரண்டு வருடகாலமாக இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியே வந்திருக்கின்றது. எங்களைப் பலவீனப்படுத்தலாம், அழிக்கலாம், பிரதேசத்தை பிரிக்கலாம் என்ற திட்டத்தில் அரசும் இராணுவமும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. எங்கள் போராட்டயுக்தி தாக்கங்கள் இராணுவத்தினரின் பேராட்டங்களை நிலைகுலையச்செய்துவருகின்றன.

முப்படைகளின் பலத்தை பாவித்து தமிழ் மக்களை அழிக்கஅரசுமுயன்றுவருகிறது இன்று விடுதலைப்புலிகள் வகுத்த யுக்திகள் போர்த்தந்திரங்களினால் எம்மீது கட்டவிழ்த்துவிடும் எந்த நடவடிக்கையும் முறியடிக்கப்பட்டுவருகின்றன.

சிங்கள அரசு பேச்சிற்கு அழைக்கிறது. இது போர்த தந்திரோபாயங்களாகும் இராணுவத்தால் வெல்லமுடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதால் அரசு குழம்பிய நிலையில் இருக்கிறது. எந்த ஒரு நிலையிலும் தீர்வுத்திட்டத்தைமுன்வைக்க முடியாதநிலையில் அரசு உள்ளது. தொண்டமான் திட்டம் சற்று வேறுபட்டதிட்டமாக எங்கள் முன்வைக்கப்பட்டது. இதை முன்வைத்து பேசஆயத்தங்களை மேற்கொண்டோம். இனவாதத்தின் பிடியில் விழுந்துகொண்ட சிங்கள அரசு தொண்டமானின் தீர்வுத்திட்டத்தின் கீழ் பேசமுடியாது என்று கைவிட்டது'' என மேலும் தெரிவித்தார். (56)

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவ மனையில் இரத்தத்திற்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் குறிப்பாக வெளி மாவட்ட நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே தாராள உள்ளம் படைத்தவர்கள் முன்வந்து இரத்தம் தந்து உதவுமாறு ''பாலம்'' பொதுப்பணி மன்றத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திரு. செ. பீற்றர் திசநாயகம்

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த திரு செ. பீற்றர் திசநாயகம் 17-4-92ல் காலமானார். இவர் திருமதி மரியதாசம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், திருமதி றஜனி குகநாதனின் அன்புத் தந்தையும், திரு. S. S குகநாதனின் (முன்னாள் உதவி ஆசிரியர், ஈழநாடு) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திரு N. S. தம்பையா, ஞானம்மா ஆகியோரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற திருமதி அக்னஸ் தம்பையாவின் வளர்ப்பு மகனும், அனே, ஆன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று சனிக்கிழமை புனித கொஞ்சேஞ்சிமாதா சேமகாலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: மனைவி திருமதி மரியதாசம்மா:

49/14, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம். (சி-6176)

## கனகசபை சண்முகம்

(காசிப்பிள்ளை)

[வர்த்தகர்]

சாவகச்சேரி - வவுனியாவை வதிவிடமாகவும் காரைநகரை பிறப்பிடமாகவும்கொண்ட கனகசபை சண்முகம் (காசிப்பிள்ளை) வர்த்தகர் வவுனியாவில் காலமாகிவிட்டார்.

இவர் திருமதி பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன் (இலண்டன்), நாகேசுவரி, விக்கினேசுவரன் (ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷா (இலண்டன்), பாமா (ஜெர்மனி), தனபாலன் (ஆசிரியர், கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம், தலைவர், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோஜினி, கரிகரன், திருநாவலன், பாரதிதாசன், சிவதர்சினி, சிவநந்தினி, சிவசாந்தினி, பிரகாஸ், பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தையா (வர்த்தகர்-வவுனியா), காலஞ்சென்ற முருகேசு (வர்த்தகர்-வவுனியா), காலஞ்சென்ற மார்க்கண்டு (ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர், அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆறுமுகம், நாகேசுவரி நாகலிங்கம் (யாழ்ப்பாணம்), சபாரத்தினம் (கணக்காய்வாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-4-92ல் வவுனியாவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கெ. தனபாலன்
(மருமகன்)

கத்தாப்பாடி ஒழுங்கை,
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (சி-6175)

## அன்னைபூபதி நினைவு நாள்

[யாழ்ப்பாணம்]

அன்னை பூபதி நினைவுநாள் கூட்டம் யாழ். பலகலைககழக கைலாசபதி அரங்கில் கா. மலரவன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீவக கோட்டக்கல்வி அதிகாரி இ. புலேந்திரன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வஜெயா, கொககுவில் இந்து அதிபர் இ. பகேந்திரன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவார்கள். இறுதியில் கலை நிகழ்ச்களும் நடைபெறவுள்ளது.

### தமிழகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயத்தில் தி. மு. க. மௌனமாக இருக்கின்றபோதிலும் புலிகளைத் தடைசெய்வதை அது எதிர்க்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### ஐ. நா.வுக்கான

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற லிபியா தவறியதால் ஆயுத பொருளாதாரத் தடை கடந்த 15ம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்ததால் லிபியா தற்போது சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (கே)

### குண்டு வெடிப்புக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெடிப்புக்களையும் மேற்கொண்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பழுகாமத்தில் உள்ள புலிகளின் இராணுவத் தலைவர் உட்பட புலிகளின் இராணுவ பிரிவு முக்கிய புள்ளிகள் இருவர் இதில் ஈடுபட்டுள்ளதாகவும் விசாரணையாளர் தெரிவித்துள்ளனர். (சி)

### கொழும்பு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் வீடு வீடாகச் சென்று தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் புதிதாக வீடுகளில் வந்து தங்குவோர் பற்றி உடனடியாகப் பொலிஸ் நிலையத்தில் பதியுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

1991-ம் ஆண்டு நடைபெறாமல் இருந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்று மாலை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இப் பரீட்சை இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்புத்துறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் திருமலை மாவட்ட காரியாலயம் அம் மாவட்டத்தில் இருந்து தச்சுவேலை, மேசன் பயிற்சி, வீட்டு மின் இணைப்பு, மகளிர் ஆடை தயாரிப்பு, மோட்டார் வாகனம் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது.

இந்த ஆறுமாதகால பயிற்சி நெறிகளுக்கு க. பொ. த. சாதாரண தரம் சித்தியடைந்த 15 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என திருகோணமலை மாவட்ட இளைஞர்சேவை உத்தியோகத்தர் திரு. என். பேரானந்தம் தெரிவித்துள்ளார். [154]

## ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளத்தில் நிலைகொண்டுள்ள படையினர் குடிமனைகளைநோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மன்னார் வீதியில் கிராமங்களை நோக்கி இச் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

### மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி

வத்தினர் அங்கிருந்த மக்களை வெளியேற்றிவிட்டு வீடுகளுக்கு தீமூட்டி எரித்தனர்.

மீன்பிடித் தொழிலுக்கான இரு கரைவலை, இரு வள்ளங்கள், ஒரு பிளாஸ்ரிக் படகு, வெளியிணைப்பு இயந்திரம்உட்பட பல உபகரணங்கள் எரித்து நாசமாக்கப்பட்டன.

இராணுவத்தினர் அவ்விடத்தைவிட்டு விலகிச் செல்லும்பொழுது அங்கிருந்த டலஆண்களை பிடித்துச் சென்றுள்ளனர்.

### தெற்கில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மின் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக இந் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் தற்போது தினசரி நாலரை மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல் செய்யப்படுகிறது.

மேலும் நெருக்கடி நிலையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் மின்சார சபை, பாவனையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்பொழுது மின்சாரத் தட்டுப்பாடு ஒரு தேசியப் பிரச்னையாக மாறியுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் துறை உட்பட கைத்தொழில் துறைகளின் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

### க. பொ. த. (உயர்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்துள்ளன.

கல்விப்பொதுத் தராதர உயர்தர (விசேட) பரீட்சை 1991 தொடர்ந்து நடைபெறுமென்றும், எம். எல். ரி. பரீட்சை 26ம் திகதியும், ஆசிரியர் பயிற்சி தொலைக்கல்விப் பரீட்சை இம்மாதம் 26ம், 27ம், 28ம் திகதிகளிலும் தொழில் நுட்பக் கல்லூரி பரீட்சைஇம்மாதம் 22ம் திகதி தொடர்ந்து நடைபெறும் என்றும் யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். [சு]

## அறிவுத்தேர்வு முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

அன்னைபூபதி நினைவுப் பொதுஅறிவுத் தேர்வு 1992 முடிவுகள் நாளை 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளிவருகிறது. அன்றைய நாளே அவ்வவ் மாவட்டங்களில் நிகழும் தாய் பூபதியின் நினைவு நாள் நிகழ்ச்சிகளின் போது உயர் 'அ' பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும்வழங்கப்படும்

சித்தியடைந்தஏனைய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களது பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுககிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலககேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் எனது கலை இலக்கிய வாழ்க்கை'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

### ரூபவாஹினி

(1-ம் பககத் தொடர்சசி)

டன் முடிவடையும்.

சனிக்கிழமை விசேட ஒளிபரப்பு காலை 10-30 மணிவரை மட்டும் நடைபெறும் காலை 7-30ற்கு பின்னர் ஆரம்பிக்சப்படும் மத ஒளிபரப்புக்களை நிறுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுஇளன.

வார இறுதியில் காண்பிக்கப்படும் திரைப்படங்களும் இடைநிறுத்தப்படும்.

### அபிவிருத்தித் திட்டங்களை

[1-ம் பககத் தொடர்ச்சி]

றம் சாட்டியுள்ளார்.

புளத்சிங்களத் தொகுதியில் நேற்றுமாலை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்:- மஹரகம, அம்பாறை குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் விசாரணை முடிவில் பலரின் பெயர்கள் அம்பலத்திற்கு வருமென்றும் தெரிவித்தார். [க]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post cffice Sri Lanka under Licence Number B/10336/81